பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 26 வியாழக்கிழமை 09.06.2022 கதிர் 107

## தெற்கில் இன்று திடீர் மின் தடை

நாட்டின் பல பகுதிகளில் இன்று அதிகாலை முதல் மின் தடை ஏற்பட்டுள்ளது.

இன்று அதிகாலை முதல், கொழும்பு, கண்டி, கம்பஹா ஆகிய மாவட்டங்களின் பல இடங்களில் இவ்வாறு மின் தடை ஏற்பட்டுள்ளது.

எனினும், இந்த மின் தடைக்கான காரணம் என்னவென்பது தொடர்பில் இலங்கை மின்சார சபை உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை.

## ‘இந்துக்களின் போர்’ நாளை கோலாகல ஆரம்பம்



கொழும்பு இந்துக் கல்லூரி

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மற்றும் கொழும்பு இந்துக் கல்லூரி ஆகியன மோதும் ‘இந்துக்களின் போர்’ என வர்ணிக்கப்படும் 11 ஆவது மாபெரும் துடுப்பாட்டச் சமர் நாளையதினம் (வெள்ளிக்கிழமை) ஆரம்பமாகவுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மைதானத்தில் நாளையதினம் காலை 08மணியளவில் ஆரம்ப நிகழ்வுகள் மற்றும் வீரர்கள் அறிமுகத்துடன் தொடங்கவுள்ள இந்துக்களின் போர் துடுப்பாட்டப் போட்டி, நாளை 10 ஆம் திகதி மற்றும் ☞2



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## எம்.பி. பதவியிலிருந்து ‘கப்புடா’ பஸில் விலகல்

### எனினும் அரசியல் பயணம் தொடரும் என்கிறார் அவர்



அரச நிர்வாகப் பணியிலிருந்து நான் விலகுகின்றேன். தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறக்கின்றேன். எனினும், எனது அரசியல் பயணம் தடைப்படாது. அது தொடரும்.

- இவ்வாறு ஶ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார். ☞2

## ‘21’ இற்கு நான் எதிர்ப்பு!

### எந்நேரமும் தேர்தலை எதிர்கொள்ள ‘மொட்டு’ தயார் என்கின்றார் பஸில்

அரசமைப்பின் 21ஆவது திருத்தச் சட்டமூலத்தை நான் எதிர்க்கின்றேன். இது எனது தனிப்பட்ட கருத்து - என்று ஶ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஶ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைமையகத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் ☞2



## அக்கரைப்பற்றில் யானை தாக்கி ஆண் குழந்தை பரிதாப மரணம்!

அம்பாறை மாவட்டம், அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பள்ளக்காட்டுப் பகுதியில் காட்டு யானை தாக்கியதில் 6 மாத ஆண் குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சுதர்சன் சதுர்சன் என்ற குழந்தையே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

நேற்று மாலை 5 மணியளவில் குறித்த பகுதியில் உள்ள மரம் ஒன்றின் கீழ் குழந்தையை உறங்க வைத்து விட்டு அதன் பெற்றோர் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

இதையடுத்து அங்கு பிரவேசித்த காட்டு யானை ☞2



## வடக்கு, கிழக்கில் வீடுகளை நிர்மாணிப்பதில் பாரபட்சம்

### அரசு மீது சாணக்கியன் எம்.பி. குற்றச்சாட்டு

வடக்கு, கிழக்கில், நல்லாட்சி அரசில் ஆரம்பிக்கப்பட்ட வீடுகளை நிர்மாணித்துத் தரவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றில் இன்று இது தொடர்பில் கேள்வி எழுப்பிய அவர், நல்லாட்சி அரசில் ஆரம்பிக்கப்பட்ட வீடுகளை, தாம் பூர்த்தி செய்யமுடியாது என்று அரசின் அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர் என்று குறிப்பிட்டார். ☞2



## மண்ணெண்ணெய் வேண்டி மஸ்கெலியாவில் போராட்டம்



மண்ணெண்ணெய் வழங்குமாறு கோரி மஸ்கெலியா எரிபொருள் நிலையத்துக்கு முன்பாக மஸ்கெலியா பிரதேச மக்கள் பிரதான வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த எரிபொருள் நிரப்பு நிலையத்துக்குக் கடந்த மூன்று கிழமையாக மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை எனத் ☞2

## விகாரைக்கு வழிபாடு செய்ய வந்த இளைஞர் நீரில் மூழ்கி உயிரிழப்பு!



பலாங்கொடை - கூரகலை விகாரைக்கு வழிபாடு செய்ய வந்த இளைஞர் ஒருவர், அங்குள்ள தூவிலிஎல்ல நீர்வீழ்ச்சிக்கு நீராடச் சென்றபோது அடித்துச் செல்லப்பட்டு நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்த நபர் மாத்தறை - ☞2

## மல்லாவியில் இளைஞர் குழு மோதல்; ஒருவர் உயிரிழப்பு; ஐந்து பேர் காயம்!

இளைஞர் குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்றும், 5 பேர் படுகாயமடைந்துள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு, மல்லாவி 4ஆம் யூனிட் திருநகர் பகுதியில் நேற்றிரவு இளைஞர் குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியது.

இதன்போது கொட்டான்களால் இளைஞர் குழுக்கள் தாக்குதல் நடத்தியதில் 6 பேர் படுகாயமடைந்து மல்லாவி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி, வவுனியா மாவட்ட மருத்துவமனைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

தாக்குதலில் படுகாயமடைந்த இளைஞர்கள் இருவர் வவுனியா மாவட்ட மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்ட நிலையில் அதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலும், ☞2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## ‘21’ இற்கு நான் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

21ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பில் பிரதமருடன் பேச்சு நடத்தினோம். அதில் உள்ள சரத்துகளுக்குப் பொறுப்புக் கூற வேண்டியது யார் எனத் தெரியவில்லை. தற்போதைய சூழ்நிலையில் சிறு அளவிலான திருத்தங்கள் தேவையில்லை. முழுமையான அரசமைப்பு மறுசீரமைப்பே அவசியம்.

எந்த நேரத்திலும் தேர்தலை எதிர்கொள்ள ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தயாராகவே உள்ளது - என்றார்.

## மண்ணெண்ணெய் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் இன்றும் மண்ணெண்ணெய் கிடைக்கும் என மக்கள் எதிர்பார்ப்புடன் வருகை தந்த நிலையில், இன்றும் மண்ணெண்ணெய் வரவில்லை என எரிபொருள் நிலைய ஊழியர்களால் தெரிவிக்கப்பட்டமையையடுத்து, ஆவேசமடைந்த மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மண்ணெண்ணெய் விநியோகம் செய்வதற்கு முறையான முறைமை ஏற்படுத்தக் கோரி இன்று காலை முதல் மண்ணெண்ணெய்க்காக வரிசையில் நின்ற சுமார் 500 இற்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்கள் வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டம் காரணமாக போக்குவரத்தும் ஸ்தம்பிதமாகியிருந்தது. குறிப்பாக மஸ்கெலியா - ஹற்றன், மஸ்கெலியா - நல்லதண்ணி போன்ற பிரதான வீதியினூடான போக்குவரத்து பல மணி நேரம் ஸ்தம்பிதமாகியிருந்தது. இதனால் பயணிகள் பெரும் சிரமத்துக்குள்ளாகியிருந்தனர்.

இதையடுத்து, நாளை அல்லது எதிர்வரும் நாள்களில் அனைவருக்கும் மண்ணெண்ணெய் கிடைக்கத் தாங்கள் ஏற்பாடுகளைத் செய்து தருகிறோம் என எரிபொருள் நிலைய அதிகாரியால் தெரிவிக்கப்பட்டமையையடுத்து, போராட்டம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டது.

## வடக்கு, கிழக்கில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எனினும், இதற்குப் பதிலளித்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, நல்லாட்சி அரசின் காலத்தைக் காட்டிலும் தற்போதைய அரசு கடன் அடிப்படையில் அதிக எண்ணிக்கையிலான வீடுகளை அமைத்துக் கொடுத்துள்ளது என்று தெரிவித்தார்.

இதன்போது குறுக்கிட்ட சாணக்கியன் எம்.பி., இந்த வீடுகளுக்கு ஒரு லட்சம் ரூபா மாத்திரமே கடன் வழங்கப்பட்டுள்ளது. இதனைக் கொண்டு வீடுகளை அமைக்கமுடியுமா? என்றும் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த வீடமைப்புத் துறையின் முன்னாள் பிரதி அமைச்சர், குறித்த வீடுகளுக்கு 6 லட்சம் ரூபா கடன் வழங்கப்பட்டுள்ளது என்று சுட்டிக் காட்டினார்.

எனினும், வழங்கப்பட்ட தகவல்கள் யாவும் பொய்யானவை என்று சாணக்கியன் எம்.பி. தெரிவித்தார்.

## விகாரைக்கு வழிபாடு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மாய்ம்மன பகுதியைச் சேர்ந்த 28 வயதான சந்திமால் புத்திக என்பவராவார்.

இவரோடு விகாரைக்குப் பயணித்த குழுவினர் இவ்விடயம் தொடர்பில் கல்தோட்டைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர்.

இளைஞரின் சடலத்தை மீட்டுள்ள கல்தோட்டைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, தூவிலஎல்ல மற்றும் இப்பகுதி நீர்நிலைகளில் இத்தினங்களில் நீரின் வேகம் அதிகரித்துள்ளதால் மிக அவதானமாக நீராடுமாறு பொலிஸார் பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## மல்லாவியில் இளைஞர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
படுகாயமடைந்த நால்வர் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சம்பவம் தொடர்பில் மல்லாவிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## அக்கரைப்பற்றில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஒன்று குழந்தையைத் தாக்கியதில் இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளது.

உயிரிழந்த குழந்தையின் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்றுப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## எம்.பி. பதவியிலிருந்து ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாடாளுமன்ற செயலாளர் நாயகத்திடம் தனது எம்.பி. பதவி விலகல் தொடர்பான கடிதத்தை இன்று கையளித்த பின்னர், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைமையகத்தில் நடத்திய விசேட ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமைச்சுப் பதவியை வகித்த காலத்தில் என்னால் முடிந்தவற்றை மக்களுக்காகச் செய்தேன். எனினும், மக்கள் எதிர்பார்த்த அனைத்தையும் செய்ய முடியாமல்போனது.

ஊடகங்கள் முன்பாக ஆங்கிலத்தில் பதிலளித்தால் மறுபடியும் ‘கப்புடா’ சர்ச்சை வந்துவிடும். சிங்கள மொழியிலேயே கதைக்கின்றேன் - என்றார்.

## ‘இந்துக்களின் போர்’ .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாளை மறுதினம் 11 ஆம் திகதி ஆகிய இரு தினங்களும் வெகு விமர்சையாக இடம்பெறவுள்ளது.

1982ம் ஆண்டு ஆரம்பமாகி நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலைகளினால் அவ்வப்போது தடைப்பட்டு, 10 வருடங்கள் போட்டி இடம்பெற்றிருந்தது. இறுதியாகக் கடந்த 2019 ஆம் ஆண்டு கொழும்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றிருந்தது. பின்னர் கடந்த இரண்டு வருடங்கள் நாட்டின் கொவிட் சூழ்நிலையால் போட்டிகள் தடைப்பட்டு இம்முறை கோலாகலமாக யாழ் இந்துக்கல்லூரி மைதானத்தில் நாளை ஆரம்பமாகவுள்ளது.

இதுவரை இடம்பெற்ற 10 போட்டிகளில் 4 போட்டிகளில் கொழும்பு இந்துக் கல்லூரியும், ஒரு போட்டியில் யாழ் இந்துக் கல்லூரியும் வெற்றி பெற்றன. 5 போட்டிகள் சமனிலையில் முடிவடைந்துள்ளன.

இவ்வருடம் இரண்டு கல்லூரி அணிகளும் மிகவும் பலம் பொருந்திய அணிகளாக காணப்படுகின்ற நிலையில், 05 வது வெற்றியாக கொழும்பு இந்துக் கல்லூரி வெற்றிபெறுமா அல்லது சொந்த மைதானத்தில் தமது ஆதிக்கத்தைக் காட்டியாழ் இந்துக்கல்லூரி இரண்டாவது முறையாக கிண்ணத்தை வெல்லுமா என்ற முனைப்பில் இரண்டு கல்லூரிகளும் எதிர்பார்ப்புடன் உள்ளமை குறிப்பிடத்தக்கது.













# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## அதிசய சமிக்ஞை

**உண்மைகளை – யதார்த்தங்களை – மறைக்கவோ, மறுக்கவோ முடியாது. ஏதேனும் ஒரு கட்டத்தில் ஏற்றுக்கொண்டே – ஒப்புக் கொண்டேயாக –வேண்டும்.**

**நெருக்கடியில் சிக்கி, நசுங்கி அவலப்படும் இலங்கைக்கு உதவும் விடயத்தில் இந்தியாவின் காத்திரமான – காலமறிந்த விரைந்த – அவசர உதவிகளை இந்தியாவுடன் முரண்பட்டு நிற்கும் சீனா கூட வெளிப்படையாக ஒப்புக்கொண்டு, அங்கீகரிக்கும் நிலைமை – கட்டாயம் – வந்திருக்கின்றது.**

**பொருளாதார நெருக்கடியில் சிக்கி, நலிவுற்று, நலிந்து போயிருக்கும் இலங்கைக்கு ஆதரவளித்து, உதவுவதில் இந்தியா எடுத்து வரும் பெரும் முயற்சியை அங்கீகரிப்பதாக கூறும் சீனா, இலங்கையின் நெருக்கடிகளை சமாளிக்க இந்தியா மற்றும் சர்வதேசம் எடுக்கும் முயற்சிகளில் அவற்றுடன் சேர்ந்து பணியாற்றவும் முன்வந்திருக்கிறது.**

**சீனாவின் இந்த விருப்பத்தை சீனாவின் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் சாகோ லிஜியான் பெய்ஜிங்கில் ஊடகவியலாளர்களுக்குத் தகவல் வெளியிடுகையில் குறிப்பிட்டிருக்கின்றார். இது சீனாவின் வெளிவிவகார அணுகுமுறை தொடர்பில் உத்தியோகபூர்வ நிலைப்பாடு.**

**வள்ளுவர் வாக்கில் கூறியபடி, ‘உடுக்கை இழந்தவன் கைபோல’ பரிதவிக்கும் இலங்கைக்கு விரைந்து உதவ ‘இடுக்கண் களையும் நட்பு போல’ முன்வந்து நிற்கின்றது இந்தியா.**

**வெளிவிவகார விடயங்களில் அயல் தேசத்துக்கு முன்னுரிமை என்ற பிரதமர் நரேந்திர மோடியின் கொள்கை திட்டத்தின் அடிப்படையில் இந்த உதவியை வாரி வழங்குகின்றது இந்தியா.**

**இலங்கை விவகாரத்தில் இந்தியாவுக்கு உள்ள தார்மீக முன்னுரிமையை – உரித்தை – மோடி அரசின் அளவில்லா உதவி முனைப்புகள் வெளிப்படுத்தி நிற்கையில், இறுதியில் அதை ஏற்று அங்கீகரிக்க வேண்டிய நிலைமைக்கு சீனா தள்ளப்பட்டிருக்கிறது.**

**இந்தப் பிராந்தியத்தில் இந்தியாவுக்கு சவாலாக, போட்டியாக, இன்னும் கொஞ்சம் விளக்கமாகக் கூறப்போனால் பெரும் அச்சுறுத்தலாக, மேலெழுந்து வருகின்றது சீன டிராகன் என்னும் பெரும்பூதம்.**

**அதே சீனா இன்று இலங்கைத் தீவில் இந்தியப் பங்களிப்பை – உணர்வுரீதியான ஊடாட்டத்தை – முன்னுரிமைப் போக்கை – ஏற்க வேண்டிய கட்டாயத்துக்கு வந்திருக்கின்றது. அதையும் தாண்டி, அந்த முன் உரித்தை அங்கீகரிக்க வேண்டிய சூழலுக்கும் சீனா உள்ளாகியுள்ளது.**

**அதற்கு மேலும் ஒரு விடயத்தை சீனா கோடிகாட்டியிருக்கின்றது. இலங்கைக்கு உதவும் விடயத்தில் இந்தியாவுடனும் சர்வதேசத்துடனும் சேர்ந்து பணியாற்றத் தயார் என்று சீனா இப்போது கூறுகிறது.**

**வரலாற்று ரீதியில் முரண்பட்டு நிற்கும் அயல் தேசங்களான இந்தியாவும் சீனாவும் தங்களுக்குள் முரண்டு கொண்டு, பாரம்பரியமான எதிர்ப்பு நிலையைப் பேணி வருகின்றன.**

**அவற்றிலிருந்து வெளியே வந்து, இலங்கைக்கு உதவுவது என்ற நற்காரியத்துக்கு இந்தியாவுடனும் சர்வதேச சமூகத்துடனும் ஒன்றுபட்டு செயற்பட சீனா முன்வந்திருப்பது வரவேற்கத்தக்க அம்சம்.**

**இலங்கைக்கு உதவும் விடயத்தில் இலங்கையின் அயல் – பக்கத்து – தேசமான இந்தியாவின் உரித்தை அங்கீகரித்தபடி அதில் இந்தியாவுடன் சேர்ந்து சீனாவும் பங்களிக்க முடியும். இந்தியாவுடன் முரண்பட்டு நிற்கும் அதன் அயல் தேசமான சீனா, இலங்கைக்கு உதவும் விடயத்திலாவது இந்தியாவுடன் சேர்ந்து பணியாற்ற முன்வந்திருப்பது உலக ஒழுங்கு தொடர்பான சர்வதேச அணுகுமுறைப் போக்கில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வருமானால் அது அதிசய சமிக்ஞைதான்.**

# கச்சதீவை இந்தியாவுக்கு கொடுக்கும் முடிவை அரசாங்கம் எடுக்கக் கூடாது!

## தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் காட்டம்

கச்சதீவை இந்தியாவுக்கு கொடுக்கும் எந்த ஒரு முடிவையும் இலங்கை அரசாங்கம் எடுக்கக்கூடாதென தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் அன்ரனி ஜேசுதாசன் கோரிக்கையொன்றை விடுத்துள்ளார். யாழ்.மாவட்டத்தில் மீனவ அமைப்புகளுடன் கலந்துரையாடலில் ஈடுபட்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாடு பொருளாதார ரீதியாக பின்னடைந்து இருக்கின்ற நிலையில், நாட்டின் பகுதிகளை வேறு நாடுகளுக்கு விற்பனைக்கோ குத்தகைக்கு வழங்குகின்ற செயற்பாடுகளையோ செய்ய வேண்டாம்.

மேலும் கடற்றொழிலாளர்கள் மண்ணெண்ணெயைப் பெறுவதில் உள்ள சிக்கல்கள் தொடர்பாக இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றதுடன், இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

# விறகுகளைப் பயன்படுத்தினால் ஆயுள் கூடுமாம் மக்களிடம் ஆளும் கட்சி உறுப்பினர் கோரிக்கை!

எரிவாயுவிற்கு பதிலாக விறகுகளைப் பயன்படுத்துவதால் ஆயுட்காலம் அதிகரிக்கும் என சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் உரையாற்றிய அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

எரிவாயு போன்ற சுத்தமான ஆற்றலைப் பயன்படுத்தும் நாடுகளில் ஆண்களின் ஆயுட்காலம் சுமார் 80 வருடங்கள் எனவும், இலங்கையில் விறகு பயன்படுத்தும் பெண்களின் ஆயுட்காலம் 80.1 வருடங்கள் எனவும் தெரிவித்தார்.

சுத்தமான எரிசக்தி எரிபொருளைப் பயன்படுத்தும் செல்வந்த நாடுகளில் உள்ளவர்களின் ஆயுட்காலம் 80 மற்றும் 85 ஆண்டுகள். ஆனால் இலங்கையில் விறகு பயன்படுத்தும் பெண்களின் ஆயுட்காலம் 80.1 வருடங்களாகும்.

அதாவது இலங்கையில் உள்ள சில குறிகாட்டிகள் தெற்காசியாவில் மிக உயர்ந்த நிலையை எட்டியுள்ளன. விறகுகளை பயன்படுத்துவது நாட்டின் வளர்ச்சிக்காகவே தவிர வீழ்ச்சிக்காக அல்ல என்பதை இது காட்டுகிறது.

இன்று விறகின் பயன்பாடு ஒரு பழங்குடி செயல்முறையாக குறைத்து மதிப்பிடப்பட்டாலும், 1800கள் வரை விறகு உலகின் முக்கிய ஆற்றல் ஆதாரமாக இருந்துள்ளது. 2020 இல், உலகின் மொத்த ஆற்றல் நுகர்வில் 10 வீதம் விறகிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# நாடாளுமன்றின் வருடாந்த அறிக்கைகளை இலத்திரனியல் பிரதிகளாக வெளியிட முடிவு

## சபைக்கு அறிவித்தார் சபாநாயகர்

நாடாளுமன்றின்வருடாந்தஅறிக்கைகள், செயலாற்று அறிக்கைகள் உள்ளிட்ட ஏனைய அறிக்கைகளை இலத்திரனியல் பிரதிகள் மூலம் வெளியிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியை நிவர்த்தி செய்வதற்கும், சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைப்பதற்கும் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சபைக்கு அறிவித்தார்.

நாடாளுமன்ற கூட்டத்தொடர் செவ்வாய்க்கிழமை கூடிய போது நாடாளுமன்றத்தின் நடவடிக்கைகளை அறிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளைக் கருத்திற்கொண்டு எதிர்காலத்தில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் வருடாந்த அறிக்கைகள், செயலாற்று அறிக்கைகள் உள்ளிட்ட ஏனைய அறிக்கைகளை இலத்திரனியல் பிரதிகள் மூலம் வெளியிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அறிக்கைளை அச்சிடும் செயற்பாடுகளுக்குத் தேவையான மூலப்பொருள்கள், குறுந்தட்டுக்கள் ஆகியவற்றைப் பெற்றுக் கொள்வதில் உள்ள சிரமம் அத்துடன் அவற்றுக்கான அதிக பணத்தை செலவிட வேண்டியுள்ளமை, குறுந்தட்டுக்களை மீள்சுழற்சி செய்யும் போது சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்பு தொடர்பாக நாடாளுமன்ற விவகாரம் தொடர்பான குழுக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

அதற்கமைய நாடாளுமன்ற அறிக்கைகளை இலத்திரனியல் முறைமைக்கு உள்ளடக்க அதிகாரி ஒருவரை நியமித்து, குறிப்பிட்ட தினத்திற்குள் மேற்படி அறிக்கைகளின் பிரதிகளை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல் ஊடாக அனுப்பிவைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரசமைப்பின் 121ஆம் உறுப்புரையின் பிரகாரம் அரசமைப்பின் 21ஆம் திருத்தச் சட்டமூலம் தொடர்பான உயர்நீதிமன்றுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஐந்து மனுக்களின் பிரதிகளும் அரசமைப்பின் 22ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நான்கு மனுக்களின் பிரதிகளும் தமக்கு கிடைக்கப் பெற்றுள்ளன என சபாநாயகர் சபைக்கு அறிவித்தார்.

# எச்.ஐ.வி. பரிசோதனை கருவிகளுக்கும் தட்டுப்பாடு!

## வைத்தியர் எச்சரிக்கை

இலங்கையில் பாதுகாப்பற்ற பாலுறவில் ஈடுபட வேண்டாம் என எயிட்ஸ் கட்டுப்பாட்டு திட்டத்தின் பணிப்பாளர் மருத்துவர் ரசாஞ்சலி ஹெட்டியாராச்சி விசேட வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எச்.ஐ.வி. பரிசோதனைக்கு பயன்படுத்தப்படும் பரிசோதனை கருவிகளுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுவதால் அவர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

கர்ப்பிணித் தாய்மார்களுக்கு இந்தப் பரிசோதனை கட்டாயம் மேற்கொள்ளப்படுகின்றமையால் அவர்களுக்கு வருடத்துக்கு சுமார் 3 லட்சத்து 50 ஆயிரம் சோதனைக் கருவிகள் தேவைப்படுகின்றன. மற்ற நோயாளிகளுக்கு ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட சோதனைக் கருவிகள் தேவைப்படுகின்றன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சில சந்தர்ப்பங்களில், முதல் மூன்று மாதங்களில் பரிசோதனை நடத்தாமல் இரண்டாவது மூன்று மாதங்களில் இருந்து பரிசோதனைகளை நடத்துமாறு சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உலக சுகாதார அமைப்பு உள்ளிட்ட அமைப்புகளிடம் ஏற்கனவே சோதனை கருவிகள் கோரப்பட்டுள்ளன எனவும், அவற்றைப் பெற மூன்று முதல் நான்கு மாதங்கள் ஆகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு

வியாழக்கிழமை 09.06.2022

# பாகிஸ்தானில் மின்சாரத்தை பயன்படுத்த கட்டுப்பாடு



பாகிஸ்தான் நாடு, பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவித்து வருகிறது. அங்கு மின்சார பற்றாக்குறை கடுமையாக உள்ளது. இதனால் மின்சாரத்தை சேமிக்கவும், அதன் பயன்பாட்டை குறைக்கவும் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அரசு அலுவலகங்களுக்கு சனிக்கிழமைவிடுமுறைஅளிக்கவலியுறுத்தப்பட்டு இருக்கிறது. இந்த நிலையில் பாகிஸ்தானில் மின்சார பற்றாக்குறையை சமாளிக்க கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. தலைநகர் இஸ்லாமாபாத்தில் இரவு 10 மணிக்கு மேல் திருமண நிகழ்ச்சிகளை நடத்த தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும் நாடு முழுவதும் இரவு 8.30 மணிக்கு அனைத்து மார்க்கெட்டுகளையும் மூட உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த தடை உத்தரவுகளை கடுமையாக அமுல்படுத்த இஸ்லாமாபாத் பொலிஸார் மற்றும் அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. விதிகளை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தப்பட்டுள்ளது. மேலும் இஸ்லாமாபாத்தில் நடக்கும் திருமண விழாக்களில் ஒரே ஒரு உணவு வழங்க மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பாகிஸ்தானில் நாள் ஒன்றுக்கு 26 ஆயிரம் மெகாவாட் மின்சாரம் தேவை. ஆனால் 22 ஆயிரம் மெகாவாட் மின்சாரமே தயாரிக்கப்படுகிறது. 4 ஆயிரம் மெகாவாட் பற்றாக்குறை உள்ளது. வரும் நாள்களில் மின்சாரம் தட்டுப்பாடு மேலும் அதிகரிக்கும் என்று கூறப்படுகிறது.

## பின்லாந்து பிரதமர் சன்னா மரினுக்கு கொரோனா தொற்று



பின்லாந்து பிரதமர் சன்னா மரின் தனக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாக நேற்று தெரிவித்தார். நேற்று முன்தினம் இரவு சன்னா மரினின் (வயது 36), உடல் வெப்பநிலை அதிகரித்தது.

இதையடுத்து அவர் கொரோனா பரிசோதனை மேற்கொண்டார். அதில் அவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

ஆனாலும் லேசான அறிகுறிகளே இருப்பதாக அவர் தன்னுடைய டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சன்னா மரின் தன்னுடைய டுவிட்டர் பக்கத்தில், நேற்று முன்தினம் இரவு எனக்கு உடல் வெப்பநிலை அதிகரித்தது. காலையில் நான் கொரோனா பரிசோதனை செய்தேன். அதில் கொரோனா உறுதி செய்யப்பட்டது. அறிகுறிகள் லேசானவை மற்றும் நான் நன்றாக உணர்கிறேன். அதிக பயணங்களின் காரணமாக நான் வழக்கமான வீட்டு பரிசோதனைகளை செய்தேன். இந்த வார தொடக்கத்தில் எனது சோதனைகள் எதிர்மறையாக இருந்தன என்று தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நாடாளுமன்ற அமர்வில் மரின் கலந்து கொண்டார் எனவும், மாலையில் அவரது அதிகாரப்பூர்வ இல்லத்தில் அமைச்சரவைக் கட்சிகளின் பாரம்பரிய கோடை கொண்டாட்டத்தை நடத்தினார் என்றும் தேசிய ஒளிபரப்பாளர் தெரிவித்தார்.

மேலும் கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டதையடுத்து பிரதமரின் அட்டவணையில் மாற்றங்கள் எதிர்பார்க்கப்பட்டன.

ஆனால் அவசரச் சட்டச் சீர்திருத்தத்தை விரைவுபடுத்துவதற்கான அனைத்துக் கட்சிக் கூட்டம் நேற்று பிற்பகல் திட்டமிட்டபடி நடைபெறும் என்று தேசிய ஒளிபரப்பாளர் அறிவித்தார்.

## குறைகிறது கொரோனாத் தொற்று உலக சுகாதார அமைப்பு தெரிவிப்பு



உலக அளவில், மத்திய கிழக்கு மற்றும் தென் கிழக்கு ஆசியா தவிர பிற பகுதிகளில் புதிதாக கொரோனா தொற்று பாதிப்புகள் மற்றும் கொரோனா இறப்புகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது. உறுதிப்படுத்தப்பட்ட கொரோனா வழக்குகள் 12 சதவீதம் குறைந்து 30 லட்சத்துக்கு அதிகமாகவும், கொரோனா மூலம் இறந்தவர்களின் எண்ணிக்கை 22 சதவீதம் குறைந்து ஏறக்குறைய 7,600 ஆகவும் உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக, உலக சுகாதார அமைப்பின் தலைமை இயக்குநர் டெட்ராஸ் அதனம் கெப்ரிசியஸ் கூறியதாவது: கடந்த ஜனவரியில் உச்சத்தைத் தொட்ட கொரோனா தொற்று தற்போது சரிவைச் சந்தித்து வருகிறது. இது மிகவும் ஊக்கமளிக்கும் ஒரு போக்காகும். இருப்பினும், தொற்றுநோய் இன்னும் முடிவடையவில்லை. பல நாடுகள் கொரோனா கட்டுப்பாட்டு நெறிமுறைகளை கைவிட்டு கொரோனாவுடன் வாழ முயற்சித்தாலும், எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இன்னும் 68 நாடுகளில் 40 சதவீத மக்கள் தடுப்பூசி செலுத்திக் கொள்ளவில்லை. தொற்றுநோய் முடிந்துவிட்டது என்ற கருத்து புரிந்துகொள்ளத்தக்கது. ஆனால் தவறானது. உருமாறிய, ஆபத்தான வைரஸ் எந்த நேரத்திலும் வெளிப்படலாம். ஏராளமான மக்கள் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளனர் என தெரிவித்தார்.


## ஈரான் ரயில் விபத்து 22 பேர் உயிரிழப்பு

கிழக்கு ஈரான் தபாஸ்நகரத்தில் இருந்து யாஸ்ட் நகரத்திற்கு பயணிகள் ரயில் சென்றுகொண்டிருந்தது. அப்போது தபாஸ் நகரத்தில் இருந்து 50 கி.மீ. தொலைவில் தண்டவாளத்தில் இருந்து இறங்கி திடீரென விபத்தில் சிக்கியது. இந்த விபத்தில் சிக்கி 13 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் 60 பேர் படுகாயமடைந்தனர் என முதல்கட்டதகவல்வெளியானது. விபத்தில்சிக்கியவர்களை மீட்கும் பணியில் மீட்புப்படையினரும், பொலிஸாரும் ஈடுபட்டனர் என மாகாணத்தின் மேலாண்மைத் தலைவர் தெரிவித்துள்ளார். இந்நிலையில், ஈரானில் ரயில் தடம் புரண்ட விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 22 ஆக அதிகரித்துள்ளது. மேலும் 87 பேர் காயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர் என மீட்புக்குழுவினர் தெரிவித்தனர்.



# புற்றுநோயிலிருந்து விடிவு கண்டுபிடிக்கப்பட்டது மருந்து

அமெரிக்காவின் மேன்ஹட்டானில் உள்ள ஸ்லோன் கெட்டரிங் நினைவு புற்றுநோய் மையம் மற்றும் ஆராய்ச்சி மையத்தில் நடத்தப்பட்ட சோதனையில் புற்றுநோயை 100 சதவீதம் குணப்படுத்தும் டோஸ்டார்லிமாப் ( dostarlimab) என்ற மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த மருந்தை வைத்து நடத்தப்பட்ட சோதனையில், கீமோதெரபி மருத்துவச் சிகிச்சை உள்ளிட்டவற்றை வழங்காமல், டோஸ்டார்லிமாப் மருந்து கொடுத்தே நோயாளிகளை 100 சதவீதம் புற்றுநோயிலிருந்து முற்றிலும் குணமடைய வைத்துள்ளனர். இந்த மருந்து மொத்தம் 18 குடல் புற்று நோயாளிகளுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. இந்த மருந்து கொடுத்தபின் அவர்கள் முற்றிலும் நோயில் இருந்து குணமடைந்து உள்ளனர். எம்.ஆர்.ஐ., பி.இ.டி. எனப்படும் பாசிட்ரான் எமின் டோமோகிராபி என்று அனைத்து சோதனையிலும் புற்றுநோய் உடலில் இல்லை என்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது. இதில் மற்றொரு சிறப்பம்சம் என்னவென்றால், இந்த நோயாளிகள் சிலர் ஏற்கனவே வேறு விதமான சிகிச்சைகளை பெற்று, அதன் காரணமாக குணப்படுத்த முடியாத நிலையை அடைந்தனர். அவர்களுக்கு டோஸ்டார்லிமாப் மருந்து கொடுக்கப்பட்டதில் குணமடைந்துள்ளனர். பொதுவாக புற்றுநோயால் பாதிக்கப்பட்டு, சிகிச்சை பெறும் நபர்களுக்கு, சிகிச்சைக்கு பின் பக்க விளைவுகள் இருக்கும். ஆனால் இவர்களுக்கு அந்த மாதிரியான பக்க விளைவுகள் எதுவும் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல் சிகிச்சை அளிக்கப்பட்டு 25 மாதங்கள் கழிந்தும் அவர்களுக்கு மீண்டும் புற்றுநோய் செல்கள் எதுவும் தோன்றவில்லை என்றும் டோஸ்டர்லிமாப் மருந்தை ஸ்பான்சர் செய்த கிளாக்ஸோஸ்மித்க்லைன் என்ற நிறுவனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக ஆய்வு கட்டுரையை எழுதி உள்ள டாக்டர் ஆண்ட்ரியா செரிக் கூறியதாவது:



இந்த மருந்து சிறப்பாக செயல்படுகிறது. புற்றுநோய் பாதிப்பு உள்ளவர்களுக்கு டோஸ்டர்லிமாப் மருந்து உடலில் மூன்று வாரங்களுக்கு ஒரு முறை என 6 மாதங்களுக்கு செலுத்தப்படும். பொதுவாக புற்றுநோய் செல்கள் உடலின் எதிர்ப்பு சக்தியில் இருந்து தப்பிப்பதற்காக முகமூடி போன்ற ஒரு படலத்தை கொண்டு மறைந்து இருக்கும். இதனால் உடலின் எதிர்ப்பு சக்தி செல்கள் புற்றுநோய் செல்களை கண்டறிய முடியாது. ஆனால் இந்த மருந்து அந்த முகமடியை நீக்குவதன் மூலம் உடலின் எதிர்ப்பு சக்தி செல்கள், சுயமாக புற்றுநோய் செல்களை அழிக்க வழி செய்கிறது. இதனால் இயற்கையாக புற்றுநோய் செல்கள் அழிகின்றன. பொதுவாக இது போன்ற சிகிச்சைகள் பக்க விளைவை ஏற்படுத்தும்.ஆனால் டோஸ்டர்லிமாப் சிகிச்சை முறை அப்படி பக்க விளைவு எதையும் ஏற்படுத்தவில்லை. இதுதான் பலரையும் ஆச்சரியப்படுத்தியுள்ளது. மோசமான நிலையை அடைந்தவர்களை கூட இந்த மருந்து குணமாக்கி உள்ளது. இவ்வாறு ஆண்ட்ரியா செரிக் கூறியுள்ளார்.

இந்த மருந்து மூலம் சிகிச்சை எடுக்க இந்திய மதிப்பில் ரூ. 9 லட்சம் வரை ஆகலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த மருந்தை மற்ற மருத்து–வர்கள் ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு செய்து உறுதி செய்ய வேண்டும். அதன்பின்பே இந்த மருந்து சந்தைக்கு வரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கு சில மாதங்கள், வருடங்கள் ஆகலாம். அதேபோல் இந்த மருந்து எத்தனை காலத்தில் நோயாளிகளை குணமாக்கும் என்பதிலும் சில சந்தேகம் உள்ளதால் அதை பற்றி கூடுதல் ஆய்வுகளும் விரைவில் நடத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# இந்தியாவில் மதப் பிரச்சினையை பா.ஜ.க. கிளப்புகிறது கர்நாடக எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு



கர்நாடக சட்டசபை எதிர்க்கட்சித் தலைவர் சித்தராமையா பெங்களூருவில் ஊடக நிருபர்களுக்கு பேட்டி அளிக்கையில், இந்தியாவில் பா.ஜ.கட்சி மதப் பிரச்சினையைக் கிளப்புவதாகக் குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

மக்கள் நன்றாக செலவு செய்தால் நாட்டின் பொருளாதார வளர்ச்சி சீராக இருக்கும். நாட்டை ஆட்சி செய்பவர்களுக்கு இது சரியாகத் தெரியாவிட்டால் நாடு அராஜகப் பாதையில்தான் செல்லும். இதற்கு நல்ல உதாரணம் இந்தியா.

மோடி பிரதமரான பிறகு கடந்த 8 ஆண்டுகளில் இந்தியாவைச் சேர்ந்த 8 லட்சம் பேர் இந்திய குடியுரிமையை துறந்து வெளிநாடுகளில் குடியேறி இருக்கிறார்கள். நாட்டில் தற்போது இளைஞர்கள் அதிகமாக உள்ளனர். அடுத்த 15 ஆண்டுகளுக்குப் பிறகு வயதானவர்கள் அதிகமாக இருக்கும் நாடாக இந்தியா மாறிவிடும்.

அரசுத் துறைகளிலுள்ள காலியிடங்களையும் நிரப்ப மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. நாட்டில் படித்த இளைஞர்களுக்கு வேலை கிடைக்காத நிலை உள்ளது. அதனால், இளைஞர்கள் அரசுக்கு எதிராகப் போராடாமல் இருக்க வேண்டும் என்பதற்காக மதப் பிரச்சினைகளை பா.ஜனதா கிளப்பிவிடுகிறது.

நாட்டில் பிரதமர் மோடி தலைமையிலான பா.ஜனதா ஆட்சியால் வளர்ச்சியில் நாடு 20 ஆண்டுகள் பின்னோக்கிச் சென்றுவிட்டது. நாடு அதல பாதாளத்தில் விழுந்துள்ளது, என்று கர்நாடக சட்டசபை எதிர்க்கட்சித் தலைவர் சித்தராமையா தனது பேட்டியின்போது தெரிவித்தார்.

## மண் காப்போம் இயக்கத்திற்கு ஒட்டுமொத்த உத்தரப் பிரதேசமும் ஆதரவு அளிக்கும் என்கின்றார் முதல்வர் யோகி ஆதித்யநாத்




இந்தியாவின் மூன்றாவது மாநிலமாக, உத்தரப் பிரதேச அரசு தங்கள் மாநிலத்தில் மண் வளத்தை மீட்டெடுப்பதற்காக மண் காப்போம் இயக்கத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது. முன்னதாக, குஜராத் மற்றும் ராஜஸ்தான் மாநிலங்கள்இந்தப்புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மண் காப்போம் இயக்கம் சார்பில் லக்னோவில் நேற்று நடந்த நிகழ்ச்சியில் உத்தரப் பிரதேச மாநில முதல்வர் யோகி ஆதித்யநாத் மற்றும் சத்குரு முன்னிலையில் இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது. அந்த மாநிலத்தின் வேளாண் துறை அமைச்சர் சூர்யா பிரதாப் சாஹி, அலகாபாத் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி ராஜேஸ் பிண்டால், தலைமைச் செயலாளர் துர்கா சங்கர் மிஸ்ரா உள்ளிட்ட பல்வேறு அரசு உயர் அதிகாரிகளும் ஆயிரக்கணக்கான மக்களும் குறித்த நிகழ்வில் பங்கேற்றனர்.

விழாவில் சத்குரு பேசுகையில், மனித குல வரலாற்றில் தற்போது முதல் முறையாக உலகின் தலைசிறந்த விஞ்ஞானிகள் மண் அழிவு என்ற வார்த்தையைப் பயன்படுத்தி வருகின்றனர், எனக்கூறி, மண் வளம் இழப்பதன் இக்கட்டான நிலையை சுட்டிக்காட்டினார்.

மேலும், இதை நம்மால் சரி செய்ய முடியும் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்திய சத்குரு, மண் வளத்தை மீட்டெடுக்கும் இந்த முயற்சியில் பாரதம் உலகிற்கு முன்னோடியாக தலைமை வகிக்க வேண்டும். ஏனென்றால், நாம் பாரதத்தில் மண்ணை தாய் மண் என அழைக்கிறோம்.

குறிப்பாக, அதிக விவசாய நிலப்பரப்பை கொண்டுள்ள நாட்டின் மிகப்பெரிய மாநிலமான உத்தரப்பிரதேசம் இந்த முயற்சியில் தலைமை வகிக்க வேண்டும், என்றும் அவர் குறிப்பிட்டார்.

சத்குருவின் கருத்துக்களை வரவேற்று உரையாற்றிய முதல்வர் யோகி ஆதித்யநாத், சத்குரு அவர்கள் நதிகளை மீட்போம், பாரதம் காப்போம் இயக்கத்திற்காக கடந்த முறை உத்தரப் பிரதேசம் வந்ததற்குப் பிறகு நாங்கள் 60 நதிகளுக்கு புத்துயிரூட்டும் பணிகளை செய்து வருகிறோம், என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

மேலும், அந்த மாநிலத்தில் மண் வளத்தை பாதுகாக்க அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளை பட்டியலிட்ட அவர், கங்கை நதியை தூய்மையாக வைத்துக்கொள்ள மேற்கொள்ளப்படும், நமாமி கங்கா திட்டம் குறித்தும் பேசினார்.

அத்துடன், உத்தரப்பிரதேசத்தில் உள்ள 25 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் மண் காப்போம் இயக்கத்திற்கு ஆதரவு அளிப்பார்கள் எனவும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

மண் வளத்தை மீட்க உலக நாடுகள் சட்டங்களை இயற்ற வலியுறுத்தி 100 நாள் மோட்டார் சைக்கிள் பயணத்தை சத்குரு மார்ச் 21 ஆம் திகதி ஆரம்பித்திருந்தார்.

ஐரோப்பா, மத்திய ஆசியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு பயணித்து பின்னர் சத்குரு கடந்த மாதம் 29 ஆம் திகதி இந்தியாவுக்குத் திரும்பியிருந்தார்.




## இரண்டாவது தவணைத் தடுப்பூசி செலுத்தாமல் 1.22 கோடி பேர் தமிழகத்தில் உள்ளனராம்

தமிழகத்தில் மெகா தடுப்பூசி முகாம் வருகிற 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஒரு லட்சம் இடங்களில் நடைபெறவுள்ளது. இதுவரையில் தடுப்பூசி செலுத்திக்கொள்ளாது இருப்பவர்களது பெயர்ப்பட்டியல் தயாரிக்கப்பட்டு அவர்களைக் கண்டறிந்து தடுப்பூசி செலுத்துவதற்கு தேவையான ஏற்பாடுகளை தமிழக சுகாதாரத்துறை செய்து வருகிறது.

நேற்று வரை ஒரு கோடியே 65 லட்சத்து 12 ஆயிரத்து 625 பேர், முதல் மற்றும் இரண்டாவது தவணை தடுப்பூசிகளைச் செலுத்திக்கொள்ளாது நிலுவையில் உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. முதல் தவணை ஊசியையே செலுத்தாமல் 42 லட்சத்து 97 ஆயிரத்து 452 பேர் உள்ளனர். இரண்டாவது தவணை ஊசியை ஒரு கோடியே 22 லட்சத்து 15 ஆயிரத்து 173 பேர் செலுத்திக் கொள்வதற்குத் தகுதி உள்ளவர்களாக இருக்கிறார்கள். இந்த விவரங்களை தமிழக பொதுச் சுகாதாரத்துறை இயக்குநர் டாக்டர் செல்வ விநாயகம் தெரிவித்திருக்கிறார்.

தமிழகத்தில் முதல் தவணை தடுப்பூசி செலுத்தாதவர்கள் அதிகமாக உள்ள மாவட்டமாக மதுரை உள்ளது. அங்கு 3 லட்சத்து 7 ஆயிரம் பேர் இதுவரையில் தடுப்பூசி போடாமல் உள்ளனர். சென்னையில் 2 லட்சத்து 40 ஆயிரம் பேரும், கன்னியாகுமரியில் 2 லட்சத்து 97 ஆயிரம் பேரும், திருப்பத்தூரில் 2 லட்சத்து 29 ஆயிரத்து 124 பேரும், ராணிப்பேட்டையில் 2 லட்சத்து 81 ஆயிரத்து 151 பேரும் முதல் தவணை தடுப்பூசி செலுத்திக் கொள்ளாமல் உள்ளனர், என்றும் அவர் குறிப்பிட்டார்.

## ஐ.எஸ். ஆதரவாளர்களுடன் தொடர்புடைய சென்னை உள்பட 9 இடங்களில் சோதனை

தமிழகத்தில் ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பினருடன் தொடர்பில் உள்ளவர்கள் பற்றிய விவரங்களை சேகரித்து தேசிய புலனாய்வு முகமை என்று அழைக்கப்படும் என்.ஐ.ஏ. அதிகாரிகள் அவ்வப்போது சோதனை நடத்திவருகிறார்கள். அந்த வகையில் மயிலாடுதுறையில் கடந்த பெப்ரவரி மாதம் ஐ.எஸ். ஆதரவாளர்கள் என்று சந்தேகிக்கப்படும் 5 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்த நிலையில், 4 மாதங்களுக்கு பிறகு என்.ஐ.ஏ. அதிகாரிகள் இந்த வழக்கு தொடர்பாக இன்று 9 இடங்களில் அதிரடி சோதனையில் ஈடுபட்டனர் என செய்திகள் வெளியாகியுள்ளன. சென்னை, மயிலாடுதுறை, காரைக்கால் ஆகிய 3 ஊர்களிலும் இந்த சோதனை நடைபெற்றுள்ளது. சென்னையில் மண்ணடி உள்பட 3 இடங்களில் சோதனை நடந்தது. மயிலாடுதுறையில் 5 இடங்களிலும், காரைக்காலில் ஒரு இடத்திலும் சோதனை நடைபெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



## மெட்ரோ வாகன நிறுத்துமிடத்தில் தீ பல வாகனங்கள் எரிந்து நாசமாகின



டெல்லி ஜாமியா நகரில் உள்ள மின்சார வாகனங்கள் நிறுத்தும் இடத்தில் நேற்று அதிகாலையில் பயங்கரத் தீ விபத்து ஏற்பட்டது. இதில், குறைந்தது 80 வாகனங்கள் தீயில் எரிந்து சாம்பலாயின.

தீ விபத்து குறித்து தகவல் தெரியவந்ததை அடுத்து சம்பவ இடத்திற்கு சுமார் 7 தீயணைப்பு வாகனங்களுடன் தீயணைப்பு வீரர்கள் விரைந்து பெரும் போராட்டத்திற்குப் பிறகு தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இது குறித்து டெல்லி தீயணைப்புச் சேவை இயக்குநர் அதுல் கர்க் தகவல் வழங்குகையில், தீ விபத்து ஏற்பட்ட வாகன நிறுத்துமிடத்திற்கு ஏழு தீயணைப்பு வாகனங்கள் விரைந்தன. தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. தீ விபத்தில் குறைந்தது 80 இ- ரிக்ஷாக்கள், 10 கார்கள், 2 ஸ்கூட்டிகள் மற்றும் ஒரு மோட்டார் சைக்கிள்ஆகியன தீயில் எரிந்து சேதமடைந்தன. தீ விபத்தில் உயிர்ச் சேதம் ஏதும் ஏற்படவில்லை. இருப்பினும் தீ விபத்துக்கான காரணம் இன்னும் கண்டறிப்படவில்லை, என்று தெரிவித்திருக்கிறார்.

# இலங்கையின் சகல மாகாணங்களுக்கும் சமச்சீராகவே இந்திய அரசின் உதவிகள்

## யாழ் துணைத்தூதுவர் எம். ராகேஷ் நடராஜ் மட்டக்களப்பில் தெரிவிப்பு





(கல்லடி நிருபர்)

இந்திய அரசாங்கத்தின் உதவிகள் இலங்கையின் அனைத்து மாகாணங் களுக்கும் சமமாகவே – சமச்சீராகவே – வழங்கப்படுகின்றன எனவும், எந்தப் பிரி வினையையும் இந்திய அரசாங்கம் பார்ப்பதில்லையெனவும் இலங்கைக் கான இந்தியத் துணைத்தூதவர் எம். நடராஜ் தெரிவித்தார்.

இந்தியாவிற்கான யாழ் துணைத் தூதுவர் எம்.ராகேஷ் நடராஜ் கடந்த செவ்வாய்க்கிழமை மட்டக்களப்புக்கு விஜயம் செய்தார். நேற்று மட்டக்களப்பு மஞ்சந்தொடுவாயில் உள்ள கிழக்கு பல்கலைக்கழகத்தின் சுவாமி விபுலா னந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத் திற்கு விஜயம் செய்தார்.

அவரை அங்கு சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் திருமதி பாரதி கெனடி தலைமையிலான குழுவினர் வரவேற் றனர். சுவாமி விபுலானந்தரின் திருவுரு வச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து வணக்கம் செலுத்திய துணைத்தூதுவர் நிறுவகத்தின் செயற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடினார்.

பல மில்லியன் ரூபா செலவில் இந் திய அரசாங்கத்தின் உதவியுடன் சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தில் அமைக்கப்படவுள்ள ஒன்றுகூடல் மண்டபத்தின் நிர்மாணப் பணிகள் தொடர்பில் கலந்துரையா டப்பட்டன.

தற்போதைய விலைவாசி உயர்வு காரணமாக இந்த ஒன்றுகூடல் மண்ட பத்தை அமைப்பதற்கான செலவு நிர்ண யிக்கப்பட்ட தொகையை விட அதிகமா கும் என்பது துணைத்தூதுவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. நிதி யின் அளவை அதிகரிக்க நடவடிக்கை யெடுக்கப்படும் எனத் துணைத் தூதுவர் உறுதியளித்தார்.

மேலும் சுவாமி விபுலானந்தா அழகி யல் கற்கைகள் நிறுவகத்தின் இசைத் துறைக்கு தேவையான உதவிகள் மற் றும் தேவையான புத்தகங்களை வழங்க வும் துணைத்தூதுவர் உறுதியளித்தார்.

இந்தச் சந்திப்பில் சுவாமி விபுலா னந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத் தின் துறைத்தலைவர்கள், விரிவுரை யாளர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது கருத்து தெரிவித்த துணைத்தூதுவர் –

இந்திய அரசாங்கம் இலங்கையில் எந்த மாகாணத்தையும் பிரித்துப் பார்க்க வில்லை. இலங்கை மக்களின் கோரிக் கைக்கு அமைவாக தமிழ் நாட்டின் நிவார ணங்கள் கூட இலங்கையின் அனைத்து பகுதி மக்களுக்கும் வழங்கி வைக்கப் பட்டன.

மட்டக்களப்பு போதனா வைத்தியசா லையில் சத்திரசிகிச்சை கூடம் ஒன்றை அமைப்பதற்கான திட்டங்கள் முன்னெடுக் கப்படுகின்றன. அது தொடர்பிலான கலந்துரையாடலை இன்று நான் நேரில் சென்று மேற்கொண்டேன். –எனவும் தெரிவித்தார்.

# அம்பாறை குடுவில் பிரதேசத்தில் குவைத் நிதியில் வீட்டுத்திட்டம்

## பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூரிடம் உறுதியளித்தார் தூதுவர்



(அஸ்லம் எஸ்.மௌலானா)

அம்பாறை மாவட்டத்தி லுள்ள மிகவும் பின்தங்கிய குடியேற்றக்கிராமமான குடுவில் பகுதியில் குவைத் அரசாங்கத் தின் நிதியுதவியுடன் 40 வீடு களை நிர்மாணித்துக் கொடுப் பதற்கு அந்நாட்டுத் தூதுவர் ஹலாப் பு தாயர், கல்முனை மாநகர சபையின் பிரதி முதல் வர் ரஹ்மத் மன்சூரிடம் உறுதி யளித்துள்ளார்.

கல்முனைப் பிராந்தியத்தின் முன்னேற்றத்திற்கு உதவுவதற் கும் குவைத் தூதுவர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள குவைத் தூதரகத்தில் நேற்றுப் புதன் கிழமை இடம்பெற்ற சந்திப் பின்போது பிரதி முதல்வர் ரஹ் மத் மன்சூர் விடுத்த வேண்டு கோளையேற்றே தூதுவர் மேற் படி விடயங்களுக்கு விருப்பம் தெரிவித்திருக்கிறார்.

இச்சந்திப்பின்போது நாட் டில் நிலவும் சமகாலப் பிரச்சி னைகள் மற்றும் கல்முனைப் பிரதேசத்திலுள்ள தேவைப்பா டுகள்தொடர்பில்விளக்கமளித்த பிரதி முதல்வர், தனது பிராந்தி யத்துக்கு உதவிகளை மேற் கொள்ளுமாறு தூதுவரிடம் கேட்டுக்கொண்டார். தன்னால் இயலுமான அனைத்து உத விகளையும் செய்து தருவேன் என தூதுவர் இதன்போது உறுதி யளித்தார்.

முன்னாள் அமைச்சரும் குவைத், பஹ்ரைன் நாடுகளின் முன்னாள் தூதுவருமான தனது தந்தை ஏ.ஆர்.மன்சூர் பெயரில் தென்கிழக்கு பல் கலைக்கழகத்தில் 90 கோடி செலவில் நிர்மாணிக்கப்பட்ட ஞாபகார்த்த மண்டபம், கல் முனை முஹையத்தீன் ஜும்ஆ பள்ளிவாசல் உள்ளிட்ட பல அபிவிருத்திப் பணிகளுக்கு குவைத் அரசாங்கம் நிதியுதவி வழங்கியமையை நினைவு கூர்ந்து, பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூர் இதன்போது நன்றி பாராட்டினார். தனது நினைவுப் பேழையில் வைத்திருந்த ஏ. ஆர். மன்சூருடனான படத்தை காண்பித்து இருவருக்குமிடை யிலான தொடர்புகளை சிலாகித் துப் பேசிய தூதுவர், அப்போ தைய நெகிழ்ச்சியான தருணங் களையும் இதன் போது பகிர்ந்து கொண்டார்.

அத்துடன் காலஞ்சென்ற முன்னாள் தூதுவரான அப்துல் லாஹ் நஸீர், ஞாபகார்த்தமாக நினைவேட்டில் ரஹ்மத் மன்சூர் தனது குறிப்புகளை பதிவு செய்தார். இச்சந்திப்பில் குவைத் தூதரகத்தின் சமூக, நலன்புரி ஒருங்கிணைப்பு உத்தியோகத் தர் முஹம்மட் பிர்தௌஸும் கலந்து கொண்டார்.

# கல்முனை கார்மேல் தேசிய கல்லூரியில் விஞ்ஞான, தொழில்நுட்பக் கண்காட்சி

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கார்மேல் பற் றிமா தேசிய கல்லூரியில் கல்வி பயிலும் தரம் – 6 தொடக் கம் தரம் – 11 வரையிலான மாணவர்களினால் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப பிரயோக கண்காட்சி நேற்று கல்லூரியின் முதல்வர் அருட்சகோதரர் எஸ்.சந்தியாகு தலைமையில் நடைபெற்றது.



பிரதம அதிதியாக கல் முனை வலயக் கல்விப் பணிப் பாளர் எஸ்.புவனேந்திரன் கலந்து கொண்டார். கௌரவ அதிதிகளாக பிரதிக்கல்விப் பணிப்பாளர் வீ.ஹிகானா அலீப், உதவிக்கல்விப் பணிப் பாளர் (விஞ்ஞானம்) எம்.எஸ். சாதுல் அமீன், கோட்டக்கல்விப் பணிப்பாளர்எஸ்சரவணமுத்து, இளம் கண்டுபிடிப்பாளர் சோ. வினோஜ்குமார் மற்றும் விஞ் ஞான பாட ஆசிரியர்களும் கலந்துகொண்டனர். இக் கண்காட்சியில் சுமார் 250க்கு மேற்பட்ட மாணவர்களின் படைப்புக்கள் பிரயோகரீதியாக கண்காட்சிக்கு வைக்கப்பட்டன.

மேலும் கல்லூரி முதல்வர் அருட்சகோதரர் எஸ்.சந்தியாகு கருத்து தெரிவிக்கையில் –

பாடசாலை விடுமுறைக்கு முன்னரே மாணவர்களுக்கு இக்கண்காட்சிக்கான படைப் புக்களை உருவாக்குவது பற் றிய விழிப்புணர்வு வழிகாட்டல் களை வழங்கியிருந்தோம். அதனால் மாணவர்களும் தங்களது விடுமுறைக் காலத்தை இவ்வாறான ஆக்கப்படைப்புக்களுக்காக செலவளித்தமை மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. இதற்காக ஆசிரியர்கள் மற்றும் பெற் றோர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"ஒரு நாடு அபிவிருத்தி அடைய வேண்டுமெனில் புதிய கண்டுபிடிப்புக்கள் மிக முக்கி யமானவை. இக்கண்காட்சியில் உள்ள புத்தாக்கங்களைத் தெரிவு செய்து அவர்களைப் பயிற்றுவித்து, அக்கண்டுபிடிப் புக்களை தேசிய மற்றும் சர் வதேச போட்டிகளுக்கு அனுப் புவதே இதன் பிரதான நோக்க மாகும். இந்த நோக்கத்திற்காக எங்களுடன் இணைந்து பணிபுரியும் அனைவருக்கும் நன்றிகளை கல்லூரி சார்பாக தெரிவித்துக் கொள்கிறேன்"– என்றார்.

# திருகோணமலை மாவட்ட செயலகத்தின் ஊழியருக்கு மரக்கறி விதைப் பொதிகள்

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்ட செயலகத்தில் பணிபுரியும் உத்தியோகத்தர்களுக்கான மரக்கறி விதைப் பொதிகள் வழங்கும் நிகழ்வு திருகோணமலை அரசாங்க அதிபர் பீ.எச்.என்.ஜயவிக்ரம தலைமையில் நேற்று மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

அத்துடன் TOMEJC ரக மாங்கன்றுகளும் இதனோடு இணைந்ததாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுக்கும் வகையில் மக்களை வீட்டுத்தோட்டம் செய்வதை ஊக்குவிக்கும் பொருட்டு பசுமையான ஒரு தேசம் தேசிய வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கைப் புரட்சி என்ற திட்டத்தின் கீழ் இவை விநியோகிக்கப்பட்டன. கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் இந்த விதைப் பொதிகள் விநியோகிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எஸ்.சுதாகரன், மாவட்ட விவசாய பணிப்பாளர் எம்.குக தாசன் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் இதில் கலந்து கொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# இந்தியக் கடன்களைபெறும் இலங்கை அரசு மலையக மக்களுக்குப் புரிவது துரோகம்!

## வடிவேல் சுரேஷ் காட்டம்



மலையக மக்களுக்கு தொடர்ந்தும் இலங்கையில் புறக்கணிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என நாடாளுமன்றில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தியாவில் இருந்து கிடைக்கின்ற கடன்களை மாத்திரம் விருப்பமாகப் பெற்றுக்கொள்கின்ற இலங்கை அரசாங்கம், ஏன் மலையகத்தில் வாழும் இந்திய வம்சாவளிகளுக்குத் துரோகம் செய்கிறது என்று பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் இந்த குற்றச்சாட்டை முன்வைத்து கேள்வி எழுப்பினார்.

பதுளை மாவட்டத்துக்காக கடந்த அரசாங்க காலத்தில் 68 பெருந்தோட்டங்களை மையப்படுத்தி 18 கலாசார மையங்களை அமைப்பதற்காக 10 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இதனையடுத்து அந்த மையங்களுக்கான இடங்கள் ஒதுக்கப்பட்டு அடிக்கற்களும் நாட்டப்பட்டுள்ளன.

இந்த இடங்களுக்காக 2கோடியே 50 லட்சம் ரூபா முற்பணமாக வழங்கப்பட்டுள்ளது.

எனினும் பெருந்தோட்டங்களில் இடங்கள் கிடைக்காமை காரணமாகவே இந்த மையங்கள் அமைக்கப்படவில்லை என்று அரசாங்கம் பதிலளித்துள்ளது.

இது முழுமையாக பொய்யான தகவல் என்று குறிப்பிட்ட வடிவேல் சுரேஷ், பெருந்தோட்ட மக்களை ஏன் இவ்வாறு அரசாங்கம் ஏமாற்றுகிறது என்று கேள்வி எழுப்பினார்.

மலையக மக்கள் பயங்கரவாதிகளல்லர். நாட்டுக்கு எதிராக செயற்பட்டவர்களல்லர். எனினும் அவர்களுக்கு எதிராகவே செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அத்துடன் தொடர்ந்தும் ஏமாற்றப்படுகிறார்கள். அவர்களுக்கு தேசிய குற்றம் மேற்கொள்ளப் பட்டுள்ளது என்றும் வடிவேல் சுரேஷ் குற்றம் சுமத்தினார்.

மலையக மக்கள் ஏற்கனவே இரண்டு வேளைகளுக்கே உணவை உட்கொள்கின்றனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தியா வழங்குகின்ற கடன்களைமாத்திரம்பெற்றுக்கொள்ளும் அரசாங்கம் ஏன், இந்திய வம்சாவளிகளை மாத்திரம் ஏமாற்றி வருகிறது. ஏன் அவர்களுக்கு துரோகம் செய்கிறது என்று வடிவேல் சுரேஷ் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த அரசாங்க கட்சியின் பிரதான அமைப்பாளர் பிரசன்ன ரணதுங்க, அரசாங்கம் பெருந்தோட்ட மக்களைப் புறக்கணிக்கவில்லை என்று குறிப்பிட்டார்.

## மின்சாரக் கட்டணங்களை உயர்த்தவே முடியாதாம் பொறியியலாளர்கள் மீது குற்றம் சுமத்தும் அமைச்சர்!



மின்சார சபையின் சில பொறியியலாளர்கள், மின்சாரக் கட்டணங்களை 300 வீதமாக உயர்த்தவேண்டும் என்று கோருகின்றபோதும், அதற்கு தாம் உடன்படப்போவதில்லை என்று மின்சக்தி மற்றும் எரிசக்திதுறை அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி திட்டங்களுக்கு உதவாத நிலையில், சிலரின் கோரிக்கைகளுக்கு இணங்க, மின்சாரக் கட்டணங்களை திருத்தம் செய்யமுடியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மின்சார சபை பணியாளர்களுக்கு வருடாந்தம் 3 வீத சம்பள அதிகரிப்பு வழங்கப்படுவதற்கு ஏற்கனவே உடன்படிக்கை உள்ளது.

எனவே அதனை உறுதிப்படுத்திக்கொள்வதற்காகவே மின்சாரசபையின் சிலர் கட்டணங்களை அதிகரிக்கக்கோருகின்றனர் என காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

எனவே சம்பளத்தை அதிகரிப்பதை கருத்திற் கொண்டு செயற்படாமல், உற்பத்திச் செலவைக் குறைப்பதற்கு செயற்படவேண்டும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதேவேளை மின்சாரசபையின் சிலர் நாட்டை இருளடையச் செய்யப்போகிறோம் என எச்சரித்துள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். இது பயங்கரவாத செயற்பாடு என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.



## பிரித்தானிய மகாராணியின் பிளாட்டினம் ஜூபிலி நிகழ்வில் இலங்கைப் படையினர் பங்குபற்றல்

பிரித்தானிய அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் இலங்கை இராணுவத்தினர் இரண்டாம் எலிசபெத் மகாராணியின் பிளாட்டினம் ஜூபிலி போட்டியில் கலந்துகொண்டனர்.


2022 ஆம் ஆண்டில், பிரித்தானிய ராணி இரண்டாம் எலிசபெத் 70 வருட சேவைக்குப் பிறகு பிளாட்டினம் ஜூபிலியைக் கொண்டாடிய முதல் பிரித்தானி ராணி ஆவார்.


ராணியின் நினைவாக ஜூன் 02 முதல் 05 வரை நடைபெற்ற கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக இந்தப் போட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இது இராணுவ காட்சி மற்றும் கலாசார நிகழ்ச்சிகள் உட்பட பல பிரிவுகளை உள்ளடக்கியது.

போட்டி நிறைவடைந்ததும், இலங்கை இராணுவக் குழு இலங்கை உயர்துாதரகத்துக்கு விஜயம் செய்ததுடன், ஐக்கிய இராச்சியத்தில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் சரோஜா சிறிசேன, முப்படையினருக்கு இந்தப் போட்டியில் பங்குபற்றியமைக்காக நன்றி தெரிவித்தார்.

# முருங்கன் ஆதார வைத்தியசாலையில் கண் சிகிச்சைக் கிளினிக் ஆரம்பம்!





மன்னார் – முருங்கன் ஆதார வைத்தியசாலையில் கண் பரிசோதனை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.விநோதன் தெரிவித்தார்.

மன்னார் பெருநிலப்பரப்பில் வாழும் மக்கள் கண் பரிசோதனை மற்றும் சிகிச்சைகளுக்காக தற்போதைய சூழ்நிலையில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு வருகை தர பல்வேறு இடர்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். குறிப்பாகப் போக்குவரத்து, பொருளாதார சுமைகளையும், ஏனைய சிரமங்களையும் குறைக்கும் நோக்குடன் முருங்கன் ஆதார வைத்தியசாலையில் கண் சிகிச்சை கிளினிக் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முதனிலை, இரண்டாம் நிலை வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்யும் பீ.எஸ்.எஸ்.பீ. செயற்திட்டத்தின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட கண் சிகிச்சை உபகரணங்கள் முருங்கன் ஆதார வைத்தியசாலையில் நிறுவப்பட்டு மேற்படி கிளினிக் செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்டது. இந்தக் கிளினிக் ஒவ்வொரு வாரமும் செவ்வாய், வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் முருங்கன் ஆதார வைத்தியசாலையில் இடம்பெறும் எனவும் தெரிவித்துள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.06.2022இல் வெளியிடப்பெற்றது.